# நற்றிணையில் மீன்வள மேலாண்மைச் சிந்தனைகள்

***முனைவர். ச. மல்லிகா, எம்.ஏ.,எம்.ஃபில்.,.,டி.ஜி.டி.,பி.எச்.டி.,டி.ஜி.டி.,எம்.எஸ்.சி(யோகா)***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
கல்லூரி, ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

***திருமதி. இரா. விபாஶ்ரீ, எம்.ஏ.,பி.எட்.,எம்ஃ;பில்***
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர், தமிழாய்வு மையம், தூத்துக்குடி
மனோன்மணியம் சுந்தரனார், பல்கலைக்கழகம், திருநெல்வேலி
DOI: https://doi.org/10.5281/zenodo.13783549

***ஆய்வுச்சுருக்கம்***

*நற்றிணைப்பாடல்கள் பழந்தமிழரின் வாழ்வைப் படம்பிடித்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளன. அக்கால மக்களின் மேலாண்மைச் சிந்தனைகள் நற்றிணையில் பரவிக் கிடக்கின்றன. நற்றிணையில் அமைந்துள்ள மீன்வள மேலாண்மைச் சிந்தனைகளை இக்கட்டுரை விளக்குகிறது. சங்ககால மக்கள் வலைகளைப் பயன்படுத்தி மீன்களைப் பிடித்துள்ளனர். இரவில் விளக்குகளின் துணையுடன் மீன் பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மீன் விற்பனை செய்வதிலும் தேர்ந்து விளங்கியுள்ளனர். விற்பனைக்குப் பின் எஞ்சிய மீன்களைப் பக்குவப்படுத்தி உலரச் செய்து பயன்படுத்தும் மேலாண்மைத்திறன் மிக்கவர்களாக இருந்துள்ளனர்.*

**முன்னுரை**

*இயற்கையோடு இயைந்து வாழ்ந்த அக்கால மக்களின் பழக்க வழக்கங்களும் பண்பாடும் மதிநுட்பமும் சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.*

***"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம் புறமென்று
இத்திறத்த எட்டுத்தொகை"*** '

*என்னும் பழம்பாடலில் எட்டுத்தொகையில் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள நற்றிணை, நானூறு பாடல்களைக் கொண்ட அகநூலாகும். இந்நூலில் ஒன்பதடி முதல் பன்னிரண்டடி வரை உள்ள நானூறு பாடல்கள் அடங்கியுள்ளன. நற்றிணையில் 102 நெய்தல் திணைப்பாடல்கள் உள்ளன. அவற்றில் காணப்படும் மீன்வள மேலாண்மைச் சிந்தனைகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**மேலாண்மை**

*மனித இனம் தோன்றியபொழுதே மேலாண்மைச் சிந்தனைகளும் தோன்றி விட்டன. எந்த ஒரு செயலைச் செய்யும் பொழுதும் அதன் நிறை குறைகளை ஆய்ந்து, திட்டமிட்டு, சரியான முறையில் செய்யத் தூண்டும் திறனையே மேலாண்மை என்கிறோம். காடுமேடுகளில்அலைந்துதிரிந்து கிழங்குகளையும், காய் கனிகளையும் உண்டு வாழ்ந்த மனிதன் தன் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகச் செய்த தொழில்களில் மீன்பிடி தொழிலும் ஒன்றாகும். மீன்வளத்தைப் பயன்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் அக்கால மக்களுக்கு இருந்த மேலாண்மைச் சிந்தனைகள் அவர்தம் தேர்ந்த அறிவுத்திறனைக் காட்டுவதாக அமைகிறது.*

**அலைகடலின் தன்மையை அறிதல்**

*மீனவர் கடலில் மீன் பிடிக்கச் செல்ல ஏதுவான காலத்தை எதிர்பார்த்திருந்தனர்.*

அலைகடலின் தன்மையை ஊகித்தறிந்து அதன்பின்னரே மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். அவ்வாறு கடல்மேல் செல்லுதற்குரிய செவ்வியைப் பார்த்துக் காத்திருக்கும்போது முறுக்குண்ட வலையைப் பிரித்துக் காய வைத்தனர் என்பதை அம்மூவனார் தம் பாடலில் குறிப்பிடுகிறார். மீன் பிடிக்கப் பயன்படுத்தும் வலையைச் செப்பனிட்டுப் பாதுகாத்தனர் என்பது அவர்தம் மீன்பிடி மேலாண்மைத் திறனைக் காட்டுகிறது. "மீன் மிகுதியாகப் படும் காலம் நோக்காது முயலும் செயல் பயனில் உழப்பாகலான், படாக் காலத்தில் வலையை யுணக்கிச் செம்மை பார்த்தல் வேண்டப்படுகிறது."[2]

**"கானலஞ் சிறுகுடிக் கடல்மேம் பரதவர்**
**நீனிறப் புன்னைக் கொழுநிழல் அசைஇத்**
**தண்பெரும் பரப்பின் ஒண்பதம் நோக்கி**
**அங்கண் அரில்வலை உணக்கும்"[3]**

## விளக்குகளுடன் சென்று மீன்பிடித்தல்

மீன் பிடிக்கச் செல்லும் பரதவர்கள் இரவிலும் சென்று பெரிய மீன்களைப் பிடித்தனர் என்பதை அறிகிறோம். கதிரவனின் ஒளியை ஒத்த ஒளிவிளக்குகளைப் பயன்படுத்தினர் என்பதையும் அறிகிறோம்.

**"அலவனொடு பெயரும் புலவுத்திரை நளிகடல்**
**பெருமீன் கொள்ளும் சிறுகுடிப் பரதவர்**
**கங்குல் மாட்டிய கனைகதிர் ஒண்சுடர்**
**முதிரா ஞாயிற் றெதிரொளி கடுக்கும்" [4]**

புலால் நாறும் அலைகளையுடைய ஒலிக்கும் கடலில், இரவுப்பொழுதில் இளஞாயிற்றின் கதிர்களை ஒத்த ஒளி பொருந்திய விளக்குகளைக் கொண்டு மீனவர் மீன் பிடிக்கச் சென்றதாக நற்றிணை கூறுகிறது.

**"கணைக்கால் மாமலர் கரப்ப மல்குகழித்**
**துணைச்சுறா வழங்கலும் வழங்கும் ஆயிடை**
**எல்லிமிழ் பனிக்கடல் மல்குசுடர்க் கொளீஇ**
**எமரும் வேட்டம் புக்கனர்." [5]**

"இரவுக் காலங்களில் கடற்பரப்பில் வந்து மேயும் மீன்கள் விளக்கொளி காணின் பலவாய் வந்து நெருங்குதல் இயல்பாதலால், அக்காலை வலைஞர் வலைவீசி அவற்றை எளிதில் பிடித்துக் கொள்வது இன்றும் நடைபெறும் செயல்" [6] என்று ஔவை துரை சாமிப் பிள்ளை கூறுவது குறிப்பிடத்தக்கது. எனவே பழந்தமிழருக்கு மீன் பிடிப்பதில் இருந்த நுண்ணிய மேலாண்மைத்திறன் புலனாகின்றது.

## வல்ஞாண் பெருவலை

பரதவர் மீன் பிடிப்பதற்கு உறுதியான பெரிய வலையைப் பயன்படுத்தினர் என்றும் தோணி நிறைய வலைகளைக் கொண்டு சென்று மீன் பிடித்தனர் என்றும் நற்றிணையில் உலோச்சனார் கூறுகிறார்.

**"வடிக்கதிர் திரித்த வன்ஞாண் பெருவலை**
**இடிக்குரற் புணரிப் பௌவத் திடுமார்**
**நிறையப் பெய்த அம்பி காழோர்**
**சிறையருங் களிற்றின் பரதவர் ஒய்யும்" [7]**

## எறியூசி பயன்படுத்தி மீன் பிடித்தல்

மீனவர்கள் உறுதியான புரிகள் பலவற்றால் ஆன கயிற்றைக் கட்டிய படகுகளுடனும் பெருமீன்களை எறியும் எறியூசிகளுடனும் இரவில் நெடுநேரம் ஒளிதரும் விளக்குகளுடனும் நள்ளிரவில் கடலுக்குச் சென்று மீன் பிடித்து வந்து புன்னை மர நிழலில் குவித்து வைத்திருந்ததை நற்றிணை குறிப்பிடுகிறது.

**"நோன்புரிக்**
**கயிறுகடை யாத்த கடுவிசை எறியுளித்**
**திண்டிமில் பரதவர் ஒண்சுடர்க் கொளீ,**
**அரைநாள் வேட்டம் போகி வைகறைக்**
**கடல்மீன் தந்து கானற் குவை," [8]**

இதன் மூலம் சங்ககால மீனவர்கள் படகுகளை உறுதிப்படுத்த முறுக்கேறிய கயிறுகளைப் பயன்படுத்தியதையும் பெருங்காற்றில் அணையாததும் நெடுநேரம் ஒளிதருவதுமான விளக்குகளைப் பயன்படுத்தி நள்ளிரவில் மீன் பிடித்தனர் என்பதையும் பெரிய மீன்களை எறியூசிகள் எறிந்து பிடிக்கும் மீன்பிடி மேலாண்மையை அறிந்திருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது.

### சிறுவர்களும் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டமை

*பரதவர்காட்டிலிருக்கும் இருப்பைப்பூப் போன்ற மெல்லிய தலையையுடைய இறா மீன்களையும் பிற மீன்களையும் தொகுதியாகப் பெற விரும்புவர். கட்டிய வலையையுடைய பரதவரின் வலிய தொழிலைச் செய்யும் சிறுவர்கள் மீன் பிடிக்கும் திமிலில் ஏறிக் கொண்டு கடலுள் நீந்திப் போவர். கடலுள் சென்ற சிறுவர்கள் வாள் போன்ற வாயை உடைய சுறா மீன்களையும் மற்றைய வலிய மீன்களையும் பிடித்து அறுத்துத் துண்டாக்கித் தோணியிலேற்றி கடற்கரைக்குக் கொணர்வர்.*

***"அத்த இருப்பைப் பூவின் அன்ன***
***துய்த்தலை இறவொடு தொகுமீன் பெறீஇயர்***
***வரிவலைப் பரதவர் கருவினைச் சிறாஅர்***
***மரன்மேற் கொண்டு மான்கணம் தகைமார்***
***வெந்திறல் இளையர் வேட்டெழுந் தாங்குத்***
***திமில்மேற் கொண்டு திரைச்சுரம் நீந்தி***
***வாள்வாய்ச் சுறவோடு வயமீன் கெண்டிய***
***நிணம்பெய் தோணியர் ஒண்மணல் இழிதரும்"*** [9]

*மீன்பிடிச் சிறுவர்களும் மீன்பிடித் தொழிலில் சிறந்து விளங்கியதை இதன்மூலம் அறிய முடிகிறது.*

### மீன்நெய் தயாரித்தல்

*நெடிய கடலிலே சென்று மீன்களைப் பிடித்த பரதவர், தாம் கொண்டு வந்த மீன்களைக் கடற்கரையில் குவித்து வைத்திருப்பர். பின்னர் மீன் கொழுப்பினால் தயாரித்த மீன் எண்ணெயைக் கிளிஞ்சலில் ஊற்றிச் சிறிய சுடரை ஏற்றி துயில்வர் என நற்றிணை கூறுகிறது.*

***"நெடுங்கடல் அலைத்த கொடுந்திமிற் பரதவர்***
***கொழுமீன் கொண்டியர் அழிமணல் குவைஇ***
***மீனெய் அட்டிக் கிளிஞ்சல் பொத்திய***
***சிறுதீ விளக்கில் துஞ்சும்"*** [10]

*இதன்மூலம் சங்ககால மக்கள் மீனின் நிணத்திலிருந்து எண்ணெய் தயாரித்துப் பயன்படுத்தினர் என்பதை அறியமுடிகிறது.*

***"மீனெய்யொடு நறவு மறுகவும்"*** [11]

*என்று பொருநராற்றுப்படையும் குறிப்பிடுகிறது.*

*பரதவ மக்கள் பகலில் மட்டுமல்லாது இரவிலும் விளக்குகளின் துணை கொண்டு கடலில் சென்று மீன் பிடித்தனர் என்பதை அறிய முடிகிறது.*

***"கடுஞ்சுறா எறிந்த கொடுந்திமில் பரதவர்***
***வாங்குதலைத் தூண்டில் ஊங்கூங் காகி***
***வளிபொரக் கற்றை சாஅய நளிசுடர்***
***நீனிற விசும்பின் மீனொடு புரையப்"*** [12]

### சுறா மீன் பிடித்தல்

*செவ்விய கோலொடு பிணித்த வளைவாக இடப்பட்ட முடிகளையுடைய அழகிய மீன்வலையைப் பயன்படுத்தினர் என்பதனையும் அழகிய வலை அறும்படியான வலிமையான கொல்லும்தன்மையுடைய சுறாமீன்களையும் பிடிக்கும் ஆற்றல் வாய்ந்தவர் என்பதனை நற்றிணை மூலம் அறிய முடிகிறது.*

***"கொடுமுடி அவ்வலை பரியப் போகிய***
***கோட்சுறாக் குறித்த முன்பொடு***
***வேட்டம் வாயா தெமர்வா ரலரே"*** [13]

### மீன் விற்பனை மேலாண்மை

*மீன் வணிகம் செய்துவந்த சங்ககால மக்கள் அதனை எளிதில் விற்பனை செய்தும் வந்தனர் என்பதை அறிய முடிகிறது. வலையை வீசி எளிதில் மீன் பிடித்தனர் என்பதையும் அதனை மருதம், முல்லை முதலிய நிலங்களுக்கு எடுத்துச் செல்லாது எளிதில் விற்பனை செய்து வந்ததை அறிய முடிகிறது.*

***"இனிதுபெறு பெருமீன் எளிதினின் மாறி"*** [14]

### சுறாமீன் பிடித்தல்

*மீன்பிடிக்கச்செல்லும்மீனவர்கள்சுறாமீன் பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு சென்றதை நற்றிணை குறிப்பிடுகிறது. மிகவும் ஆற்றல் வாய்ந்த மீனாகக் கருதப்படும் சுறாமீனைப் பிடித்தலைச் சிறந்த தொழில் வன்மையாக அவர்கள் கருதியதை இதன்மூலம் அறிய முடிகிறது.*

"*கொடுஞ்சுறா எறித்த கடுங்கோள் தந்தை*" [15]

### பரதவர் சுறாமீன் வேட்டையாடுதலை

"***வயச்சுறா எறிந்த புண்தணிந்து எந்தையும்***
***நீனிறப் பெருங்கடல் புக்கனன் யாயும்***" [16]

*என்று பிற இலக்கியங்களும் குறிப்பிடுவது ஒப்புநோக்கத்தக்கது.*

### செதுமீன் உணக்குதல்

*பரந்த கடலில் மீன் பிடிக்கும் தொழிலை மேற்கொண்ட பரதவர் செதுமீன் உணக்கியதாக நற்றிணை கூறுகிறது. "செதுமீன் உணக்குதல்" என்பது மீனவர் தாங்கள் பெற்ற மிகுதியான மீன்களை உலர வைப்பதாகும்.*

"***உரவுக்கடல் உழந்த பெருவலைப் பரதவர்***
***செதுமீன் உணக்கிய புதுமணல்***" [17]

*அதிக அளவில் உணவுப்பொருள் கிடைக்கும் போது அதனைப் பக்குவப்படுத்திப் பிறிதொரு நாளுக்குச் சேமித்து வைக்கும் மேலாண்மை அவர்களுக்கு இருந்தது என்பதை இதன்மூலம் அறிய முடிகிறது.*

### இறா மீன் உணக்குதல்

*பரதவர் குலப் பெண்கள், முற்றாத மஞ்சள் கிழங்கின் பசிய புறத்தைப் போலச் சுரசுரப்பான இறாமீன் குவியல்களைப் புன்னை மர நிழலில் அமர்ந்து உலர்த்தினர்.*

"***முற்றா மஞ்சட் பசும்புறம் கடுப்பச்***
***சுற்றிய பிணர சூழ்கழி இறவின்***
***கணங்கொள் குப்பை உணங்குதிறன் நோக்கி***
***புன்னையங் கொழுநிழல் முன்னுய்த்துப் பரப்பும்***" [18]

*புன்னை மர நிழலில் மீன்களைக் குவித்து வெயில் அதிகமானதும் அதனை உலர்த்திப் பக்குவப்படுத்தியுள்ளனர். இறா மீன்களைத் தின்ன வரும் பறவைகளைப் புன்னை மர நிழலில் அமர்ந்து ஓட்டினர் என்பதும் அவர்களின் மீன் மேலாண்மைத் திறனை உணர்த்துகிறது.*

### கடற்கரைப் பாதுகாப்பு மேலாண்மை

*தங்களுக்கு வாழ்வளிக்கும் கடலையும் கடற்கரையையும் போற்றிப் பாதுகாப்பதில் அக்கால மக்களுக்கு அதிக அக்கறை இருந்தது. கடற்கரையில் மண் அரிப்பைத் தடுக்கும் வகையில் பனை மரங்களை வளர்த்து வந்தனர் என்பதை அறிய முடிகிறது. கடலில் மீன் பிடித்து வந்ததும் தோணிகளைப் பனைமரத்தில் கட்டி வைத்திருந்ததை நற்றிணை கூறுகிறது.*

"***ஆடரை ஒழித்த நீடிரும் பெண்ணை***
***வீழ்கால் ஓலைச் சூழ்சிறை யாத்த***
***கானல் நண்ணிய வான்மணன் முன்றில்***
***எல்லி யன்ன இருணிறப் புன்னை***
***நல்லரை முழுமுதல் அவ்வயின்***
***தூங்கல் அம்பின் தூவலஞ் சேர்ப்பின்***" [19]

### முடிவுரை

*நற்றிணை அகநூலாக இருப்பினும் அக்கால மக்களின் புறவாழ்க்கை பற்றிய செய்திகளையும் அப்பாடல்கள்வழி அறிய முடிகிறது. நெய்தல் நில மக்களின் முதன்மையான தொழிலாக மீன்பிடிதொழில் இருந்ததனை அறிய முடிகிறது. இரவிலும் விளக்குகளின் துணை கொண்டு மீன் பிடித்தல், உறுதியான வலைகளைப் பயன்படுத்துதல், மீன் விற்பனைக்குப்பின் எஞ்சிய மீன்களைப் பக்குவப்படுத்தி உலர்த்துதல் ஆகிய மேலாண்மைச் சிந்தனைகளை அறிய முடிகிறது.*

### அடிக்குறிப்புகள்

1. *நற்றிணை மூலமும் விளக்கவுரையும் பாகம் -1 பக்கம் -13, ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, பூம்புகார் பதிப்பகம், 127 (ப.எண்: 63) பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை - 600108.*
2. *மேலது, பக்.51.*
3. *மேலது, பா.4.*
4. *நற்றிணை மூலமும் விளக்கவுரையும் பாகம் - 2, பா.219.*
5. *நற்றிணை மூலமும் விளக்கவுரையும் பாகம் -1, பா.67.*

6. மேலது, பக்.324.
7. மேலது, பா.74.
8. நற்றிணை மூலமும் விளக்கவுரையும் பாகம் - 2, பா.388.
9. நற்றிணை மூலமும் விளக்கவுரையும் பாகம் -1 பா.111.
10. மேலது, பா. 175.
11. பொருநராற்றுப்படை, பா.215.
12. நற்றிணை மூலமும் விளக்கவுரையும் பாகம் -1, பா.199.
13. நற்றிணை மூலமும் விளக்கவுரையும் பாகம் -2, பா.215.
14. மேலது, பா.239.
15. மேலது, பா.392.
16. குறுந்தொகை, பா.269.
17. நற்றிணை மூலமும் விளக்கவுரையும் பாகம் -1 பா.63.
18. மேலது, பா.101.
19. நற்றிணை மூலமும் விளக்கவுரையும் பாகம் -2 பா.354.